# இன்றைய இறைவார்த்தை

# 20-07-2015

## ஆண்டின் பொதுக்காலம் 16ஆம் வாரம் – திங்கள்
## முதல் ஆண்டு

**முதல் வாசகம்:**

பார்வோனை வென்று நான் மாட்சியுறும் போது,
“நானே ஆண்டவர்” என்று எகிப்தியர் உணர்ந்து கொள்வர்.

**விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம். 14 : 5 – 18**

அந்நாள்களில், மக்கள் ஓடிப் போய்விட்டார்கள் என எகிப்திய மன்னனுக்கு அறிவிக்கப்பட்டபோது, பார்வோனின் மனமும் அவன் அலுவலர் மனமும் இம்மக்களைப் பொறுத்தமட்டில் மாற்றம் கண்டது. “நாம் இப்படிச் செய்து விட்டோமே! நமக்கு ஊழியம் செய்த இஸ்ரயேலரை ஏன் தான் அனுப்பி விட்டோம்?” என்று அவர்கள் பேசிக் கொண்டனர். எனவே அவன் தன் தேரைப் பூட்டித் தன் ஆள்களையும் கூட்டிக்கொண்டு கிளம்பினான். தேர்ந்தெடுக்கப்பட்ட அறுநூறு தேர்களையும், மற்றும் எகிப்திலிருந்த எல்லாத் தேர்களையும், அவற்றின் படைத்தலைவர்கள் அனைவரையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டான். ஆண்டவர் எகிப்திய மன்னனாகிய பார்வோனின் மனம் இறுகிவிடச் செய்தார். அவனும் இஸ்ரயேல் மக்களைத் துரத்திச் சென்றான். இஸ்ரயேல் மக்களோ வெற்றிக் கை உயர்த்தியவாறு சென்று கொண்டிருந்தனர். பார்வோனின் குதிரைகள், தேர்கள், குதிரை வீரர்கள், படை ஆகிய இவை அனைத்தோடும் எகிப்தியர் அவர்களைத் துரத்திச் சென்று பாகால் செபோனுக்கு எதிரேயுள்ள பிககிரோத்தின் எதிரே கடலின் அருகில் பாளையம் இறங்கியிருந்த அவர்களை நெருங்கினர். பார்வோன் நெருங்கி வந்துகொண்டிருக்க, இஸ்ரயேல் மக்களும் தம் கண்களை உயர்த்தி எகிப்தியர் தங்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டனர். பெரிதும் அச்சமுற்றவராய் இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரை நோக்கிக் கூக்குரல் எழுப்பினர். அவர்கள் மோசேயை நோக்கி, “எகிப்தில் சவக்குழிகள் இல்லையென்றா நீர் எங்களைப் பாலைநிலத்தில் சாவதற்கு இழுத்து வந்தீர்? எகிப்திலிருந்து எங்களை வெளியேற்றி இப்படி எங்களுக்குச் செய்துவிட்டீரே! “எங்களை விட்டு விடும். நாங்கள் எகிப்தியர்களுக்கு ஊழியம் செய்வோம்” என்பது தானே எகிப்தில் நாங்கள் உம்மிடம் கூறிய வார்த்தை! ஏனெனில் பாலைநிலத்தில் செத்தொழிவதைவிட, எகிப்தியருக்கு ஊழியம் செய்வதே எங்களுக்கு நலம்” என்றனர். மோசே மக்களை நோக்கி, “அஞ்சாதீர்கள்! நிலைகுலையாதீர்கள்! இன்று ஆண்டவர் தாமே உங்களுக்காக ஆற்றும் விடுதலைச் செயலைப் பாருங்கள். இன்று நீங்கள் காணும் எகிப்தியரை இனிமேல் என்றுமே காணப் போவதில்லை. ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார். நீங்கள் அமைதியாயிருங்கள்” என்றார். ஆண்டவர் மோசேயை நோக்கி, “ஏன் என்னை நோக்கி அழ வேண்டும்? முன்னோக்கிச் செல்லும்படி இஸ்ரயேல் மக்களிடம் சொல். கோலை உயர்த்திப் பிடித்தவாறு உன் கையைக் கடல் மேல் நீட்டி அதனைப் பிரித்து விடு. இஸ்ரயேல் மக்கள் கடல் நடுவே உலர்ந்த தரையில் நடந்து செல்வார்கள். நான் எகிப்தியரின் மனத்தைக் கடினப்

படுத்துவேன். அவர்கள் இஸ்ரயேலரைப் பின்தொடர்ந்து செல்வார்கள். அப்போது பார்வோனையும் அவனுடைய படைகள், தேர்கள், குதிரை வீரர்கள் அனைவரையும் வென்று நான் மாட்சியுறுவேன். பார்வோனையும் அவன் தேர்களையும் குதிரை வீரர்கள் அனைவரையும் வென்று நான் மாட்சியுறும் போது, "நானே ஆண்டவர்" என்று எகிப்தியர் உணர்ந்து கொள்வர்" என்றார்.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**
**விடுதலைப் பயணம்: 15 : 1, 2, 3 – 4, 5 – 6 (பல்லவி 1b)**
**பல்லவி: ஆண்டவருக்குப் புகழ் பாடுவேன். ஏனெனில், மாட்சியுடன் வெற்றி பெற்றார்.**

1. ஆண்டவருக்கு நான் புகழ் பாடுவேன். ஏனெனில், அவர் மாட்சியுடன் வெற்றி பெற்றார். குதிரையையும், குதிரை வீரனையும் கடலுக்குள் அமிழ்த்திவிட்டார். பல்லவி

2. ஆண்டவரே என் ஆற்றல். என் பாடல். அவரே என் விடுதலை. என் கடவுள். அவரை நான் புகழ்ந்தேத்துவேன். அவரே என் மூதாதையரின் கடவுள் அவரை நான் ஏத்திப் போற்றுவேன். பல்லவி

3. போரில் வல்லவர் ஆண்டவர். "ஆண்டவர்" என்பது அவர் பெயராம். பார்வோனின் தேர்களையும் படையையும் அவர் கடலில் தள்ளிவிட்டார். அவனுடைய சிறந்த படைத்தலைவர்கள் செங்கடலில் அமிழ்த்தப்பட்டனர். பல்லவி

4. ஆழங்களில் அவர்கள் கல்லைப் போல் மூழ்கிப் போயினர். ஆழங்கள் அவர்களை மூடிக்கொண்டன. ஆண்டவரே, உம் வலக்கை வலிமையில் மாண்புற்றது. ஆண்டவரே, உமது வலக்கை பகைவரைச் சிதறடிக்கின்றது. பல்லவி

**<u>நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:</u> (திருப்பாடல் 95 : 8b, 7b)**
அல்லேலூயா, அல்லேலூயா!
இன்று உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
மாறாக நீங்கள் அவரது குரலுக்குச் செவி கொடுத்தால் எத்துணை நலம்!
அல்லேலூயா.

# இன்றைய இறைவார்த்தை

# 20-07-2015

**நற்செய்தி வாசகம்:**

தீர்ப்பு நாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார்.

✠ தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 12 : 38 – 42

அக்காலத்தில் மறைநூல் அறிஞர் சிலரும் பரிசேயர் சிலரும் இயேசுவுக்கு மறுமொழியாக, “போதகரே, நீர் அடையாளம் ஒன்று காட்ட வேண்டும் என விரும்புகிறோம்” என்றனர். அதற்கு அவர் கூறியது: “இந்தத் தீய விபசாரத் தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு இறைவாக்கினரான யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப் படமாட்டாது. யோனா மூன்று பகலும் மூன்று இரவும் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தார். அவ்வாறே மானிட மகனும் மூன்று பகலும் மூன்று இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார். தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து, இவர்களைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில் யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் மனம் மாறியவர்கள். ஆனால், இங்கிருப்பவர் யோனாவை விடப் பெரியவர் அல்லவா! தீர்ப்பு நாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க உலகின் கடைக்கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா!”

கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.

**சிந்தனைக்கு:**

வாழ்க்கை இலக்கைச் சென்றடையும் இனிய பயணமாகிட அடையாளங்கள் அவசியம். மறைநூல் அறிஞருக்கு மறுத்த இறைவன் இயேசு மீண்டும் மிகச் சிறந்த அடையாளம் ஒன்றை அவர்களுக்கு வழங்குகிறார். இஸ்ராயேல் மக்களின் வரலாற்றுப் பயணத்தில் பல்வேறு அடையாளங்களை வழங்கியுள்ளார். ஒளிரும் மேகம், நிழல் தரும் மேகம், பாறையில் பெருக்கெடுத்த தண்ணீர், பாலை நிலத்தில் பொழிந்த மன்னா, செங்கடல் பயணம், பேழைப்பிரசன்னம், இறைவாக்கினர்கள், அவர்களின் அருள்வாக்குகள், எழுந்த அரசுகள், வீழ்ந்த அரசுகள் எல்லாம் அடையாளங்களே. இத்தனை அடையாளங்களும் அலட்சியப்படுத்தப்பட்டன. எனவே தான் “விபச்சாரத் தலைமுறையே” என்னும் கடுஞ்சொல்லைப் பயன்படுத்திய இறைவன் மீண்டும் ஒரு அடையாளம் வழங்குகிறார். யோனா இறைவாக்கினரை ஒரு அடையாளமாக்கி வரலாற்றின் மிகப் பெரிய அடையாளமான இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு இவற்றை முக்காலத்துக்கும் எக்காலத்துக்கும் அடையாளமாக்கினார்.

இறைமயமாக்கும் இலட்சியப் பயணத்தின் நிறைவை அடைய இறைவனும் அவ்வப்போது நமக்கும் பல அடையாளங்களைத் தருகிறார். இன்றும் அதே உன்னத வெளிப்பாட்டின் சாயல் உலகில் பல்வேறு விதங்களில் அடையாளங்களாக கொடுக்கப்படுகிறன. விரிகின்ற பூவும் வாடி வதங்கும் மலரும் ஒரு அடையாளம். பிறப்பும் ஒரு அடையாளம், இறப்பும் ஒரு அடையாளம். கேட்கும் செய்தியும், பார்க்கும் காட்சியும், வீசும் காற்றும், வெள்ளமும், வரட்சியும் அடையாளமே. நம் வாழ்க்கைப் பயணத்தில் இறைவன் நமக்கு வழங்கும் அடையாளங்களை அடையாளம் காண வரம் வேண்டி செபிப்போம். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********